DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.191/2025

Prosecution witness – PW 1

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.ரோசனமேரி | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused absent  Petiton filed and allowed.)
26.02.2026 at 12.35 P.M.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது சிக்கல் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 28.06.2025ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் சிக்கல காவல்நிலைய அலுவலலில் இருந்த போது சிக்கல் காவல் நிலைய ள சார்பு ஆய்வாளர் திரு.முத்துக்குமார் என்பவருக்கு கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின் பேரில் நானும், என்னுடன் பணியாற்றிய முதல் நிலைக்காவலர் 868 – திருமதி. சோலையம்மாள் அவர்கள் காமராஜபுரம் எதிரியின் வீட்டின் அருகே மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செல்லும் போது எங்களை பார்த்து செல்ல முயன்ற எதிரியை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரணை செய்ததில் பெயர் விலாசம் கேட்டுக்தெரிந்து கொண்டோம். காமராஜபுரத்தை சேர்ந்த முருகேசன் மனைவி சண்முகவள்ளி என்பவர் எந்த வித அரசு அனுமதியின்றி 180 ML அளவுள்ள மதுவுடன் கூடிய Mic lean Brandy – 5, Black Pearl Brandy – 2, Mens Club Brandy – 1 மொத்தம் 8 பாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்தவரை தக்க காரணம் கூறி சார்பு ஆய்வாளர் அவர்கள் கைது செய்து தனிநபர் யாரும் முன்வராதால் எங்கள் இருவரின் முன்னிலையில் காலை 10.30 மணிக்கு அத்தாட்சி தயார் செய்தார். அதில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம். பின்னர் வழக்கு சொத்துக்களுடன் எதிரியை சிக்கல் காவல்நிலையத்திலிருந்து காலை 11.30 மணிக்கு சிக்கல் காவல் நிலைய குற்ற எண். 52/2025 பிரிவு 4(1)(C) TNP Act ன்

கீழ் வழக்கு பதிவு செய்தார். அத்தாட்சியிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆகும்.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மேற்சொன்ன 180 ML அளவுள்ள மதுவுடன் கூடிய Mic lean Brandy – 5, Black Pearl Brandy – 2, Mens Club Brandy – 1 மதுபாட்டில்களை தான் மேற்படி சம்பவ தினத்தன்று எதிரிடமிருந்து கைப்பற்றினோம். அந்த புகைப்படம் அ.சா.ஆ.2 ஆகும். அதன் பிறகு அவரை காவல் நிலையத்தில் அழைத்து வந்து முதல் தகவல் அறிக்கை சார்பு ஆய்வாளருடன் பதிவு செய்தார்.

4. மேற்படி சம்பவத்தின் போது சார்பு ஆய்வாளருக்கு உதவியாக நாங்கள் இருந்தோம். இது தொடர்பாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நாங்கள் சம்பவ இடத்திற்கு தகவலின் பேரில் நேரடியாக சென்றோமா அல்லது ரோந்து சென்றுவிட்டு நேரடியாக சென்றோமா என்றால் சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் பேரில் சார்பு ஆய்வாளர் எங்களை அழைத்து சென்றார். சம்பவ இடத்தை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. சம்பவ இடத்தில் மதுபாட்டில்களை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்வதற்கு எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் சுமார் 1 மணி நேரம் இருந்தது. இந்த வழககின் புகார்தாரரும், விசாணை அதிகாரியும் எங்கள் காவல்நிலையத்தில் பணிபுரியும் சார்பு ஆய்வாளர் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தற்கு செல்லவில்லை என்பதால் தான், சம்பவ இடத்தில் உள்ள வீடுகளை நான் கூறவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கு சம்பவம் நடைபெற்று 7 மாதங்கள் தான் ஆகிறது என்பதால் எனக்கு ஞாபகமிருக்கும் நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சிக்கல் காவல்நிலையத்தில் எவ்வளவு நாட்களாக பணிபுரிகிறேன் என்றால் 1 வருடமாக பணிபுரிகிறேன். நான் சம்பவ தினத்தன்று சம்பவ இடத்திற்கு சென்ற விவரம் காவல்நிலைய பொது நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரியிடமிருந்து எந்த வித மதுபாட்டில்களையும்

கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் அத்தாட்சியானது காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/–சாதுசிவசுப்பிரமணியன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி